# ஆத்ம ஜோதி



திருவள்ளுவர்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்

ஜோதி 13 || பிலவஸு வைகாசி மீ 1-ந்உ (14 5-61) || சுடர் 7

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | திருக்குறளின் சிறப்பு | 193 |
| 2 | திருவள்ளுவரின் திருவுள்ளக்காட்சி | 194 |
| 3 | கடவுள் வாழ்த்தில் வள்ளுவர்சாதனை | 195 |
| 4 | உலகம் உவப்ப உதித்தது திருக்குறல் | 199 |
| 5 | தன்வாழ்வும் சமூக வாழ்வும் | 202 |
| 6 | திருவள்ளுவர் | 205 |
| 7 | சுத்தானந்தரின் கடிதங்கள் 10 | 208 |
| 8 | கொடுங்கோலாட்சி கெடுங்கோனுட்சி | 213 |
| 9 | எது இழிவு ? | 215 |
| 10 | வாழ்க்கையின் இலட்சியம் | 218 |
| 11 | எல்லாம் – பதினெட்டே | 220 |
| 12 | வீடே உமக்கில்லையோ | 221 |
| 13 | நான் யார் ? | 222 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. [சிலோன்]


## திருக்குறளின் சிறப்பு

(மகரிஷி சுத்தானந்தர்)

செய்யொத்த பயிர்போலச் செந்தமிழுஞ்
செழும் பொருளுஞ் சேர்ந்த செல்வம்;
மையொத்த மனவிருளை மாற்றி யொளிர்
மணிவிளக்கு; மாந்த ரெல்லாம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமர
வாழ்வெய்த வழி நடத்துங்
கையொத்த நற்றுணைவன்; வள்ளுவனுர்
திருக்குறளெங் கண்க ளன்றே!

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாமரையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க!

நால்வரிசை யமுதிருக்க நம்மாழ்வார்
மொழியிருக்கச் சேக்கி ழாரின்
பால்வடிசெந் தமிழிருக்கக் கம்பச்சித்
திரமிருக்கப் பகலே போன்று
ஞாலத்தி லறம்விளக்கும் நாயனர்
குறளிருக்க,நமது நற்றய்
காலத்தை வென்றேங்குங் கற்பகம்போற்
கனிபெருகக் கண்டி லோமோ!

## திருவள்ளுவரின் திருவுள்ளக் காட்சி

1 வாழும் உயிர்கள் வருபிறவித் துன்பொழியச்
சூழும் நிலைகளில் தோயாமல் — ஏழுணர்வாம்
மேலறிவில் நின்றுநிலை மெய்யுணர்தல் கற்பிக்கும்
வாலறிவன் மேடைக்கு வந்து

2 மூவா உலகிற்கு முப்பால் முதலளித்த
தாவா இனிமைத் தனித்தமிழன் — தேவாரன்
ஓவாத ஒண்குணச் செல்வத்தை ஒவ்வொன்றாய்
நாவாரச் சொல்வர் நயந்து

3 ஆதி பகவன்; அறவாழி அந்தணன்
ஏதும் தனக்குவமை இல்லாதான் — ஓதிறைவன்
வேண்டுதல் வேண்டாமை இல்லாதான்; வாலறிவன்
ஈண்டெண் குணத்தவனே என்று

4 ஐந்தவித்தான்; அந்தண் மலர்மிசை ஏகினான்;
எந்தமிழ் வள்ளுவர்என் றேத்தியே — முந்தும்
பிறப்புத் துயர்க்குப் பெருமருந்தென் றெண்ணிச்
சிறப்புத் தொழுதார் சிரம்.

5 பன்னாட் பிரிந்ததாய் சேயைப் பரிந்தணைத்து
என்னானும் ஈதற் கிருத்துவள் போல் — அன்னாரை
வீற்றிருத்தி வள்ளுவனார் வேண்டும் உளத்தமிழ்தைத்
தேற்றி அளிப்பர் செவிக்கு

6 போரே போரென்றுதினம் பொல்லாத் துயரத்தில்
நேரே ஒடிந்துழன்ற நெஞ்சரெலாம் — ஏராக
வான வெளிநிலவில் மான விதானத்தில்
ஞானமுறக் கேட்பர் நயந்து.

— திருவள்ளுவர் காவியத்திலிருந்து —



## கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் சாதனை

( ஆசிரியர் )

வள்ளுவர் குறளிலே முதன் நான்கு அதிகாரங்களையும் இடைச் செருகல் என ஒதுக்கித்தள்ளுபவர்களை இன்று காண்கின்றோம். வள்ளுவர் காலத்திலே இந்த ஆட்சேபனை எழும்பவில்லை. பாயிரவியல் நான்கினுள்ளே முதலாவது கடவுள் வாழ்த்தாகும். அதனை வள்ளுவர் செய்தாலும் சரி; அன்றி இடைச் செருகலானாலும் சரி; கடவுள் வாழ்த்தில் கூறப்படும் விஷயங்கள் எமது வாழ்விற்கு எந்த அளவில் பொருந்துகின்றன.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பதறிவு**

கடவுள் வாழ்த்தில் மெய்ப்பொருள் இருக்குமானால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

இறைவன் பெருமையை எவரும் அளவிட்டுரைக்க முடியாது. வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன் அத்தகைய இறைவனை உள்ளத்திலே அன்புசெய்வதற்கு அவனது திருவடியை நினைக்கவேண்டுமென்கின்றார். எத்தனையோ சிறந்த உறுப்புக்கள் எல்லாம் இருக்க அடியை ஏன் நினைக்க வேண்டுமென்கின்றார் என்பது ஒரு கேள்வி. உலகவழக்கிலே கூட 'அவன் காலைப்பிடித்துக் காரியத்தைச் சாதித்து விட்டான்' என்று சொல்லக்கேட்கின்றோம். ஆண்டவன் காலைப் பிடித்து விழும்போது நான் என்ற அகங்காரம் அற்றுப்போகின்றது. அகங்காரம் அற்ற இடத்திலே தான் ஆண்டவன் எழுந்தருளுகின்றான்.

அடியைத்தேடிச் சென்ற ஸ்ரீமகாவிஷ்ணுமூர்த்தி அறிவு பெற்றுவந்தார். முடியைத் தேடிச்சென்ற பிரமதேவர் பொய் யனுகி வந்து சேர்ந்தார். ஆகவே ஆண்டவனது திருவடி, ஞானத்தைக் கொடுப்பது என்பதாகின்றது. ஞானமுள்ள இடமே திருவடிநிலையம். ஆண்டவனின் ஊன்றிய திருப்பாதம் ஆணவத்தைப் போக்குகின்றது. தூக்கிய திருப்பாதம் ஆன்மாக்களுக்கு ஆறுதலைக் கொடுக்கின்றது. காரைக் காலம்மையாரும் நீ ஆடும்போது உன் அடியின் கீழிருக்க வேண்டுமென வேண்டுகின்ருர்.

வள்ளுவர் பெருமான் கடவுள் வாழ்த்திலே ஏழுஇடங்களில் இறைவனது திருவடியைக் குறிப்பிடுகின்ருர்.

"வாலறிவன் நற்ருள்"
"மலர்மிசையேகினுன் மாணடி"
"வேண்டுதல் வேண்டாமையிலா னடி"
"தனக்குவமையில்லாதான் தாள்"
"அறவாழியந்தணன் தாள்"
"எண்குணத்தான் தாள்"
"இறைவனடி"

எழுத்தைக் கொண்டு எழுதினவனை எண்ணிப்பார்க்கின்ருேம். அதேபோல உலகத்தைக் கொண்டு அதை உண்டாக்கினவனை எண்ணவேண்டும். அவனை எண்ணுதற்கு ஏற்றபொருளாக இருப்பது அவனது திருவடியாகும். தூய அறிவுசொரூபமாக விளங்குபவன் ஆண்டவன் ஆனபடியினுல் வாலறிவன் நற்ருள் என்ருர். இப்படிப்பட்ட இறைவன் எங்கே இருக்கின்ருன்? நம்முடைய மனத்தாமரையில் கூடவே வந்தவன். அகங்காரத்திரையை எடுத்துவிட்டால் திருவடிதானேயுமக்குவந்து வெளிப்படுமே.

அப்பகவானை எப்படி வணங்க வேண்டும்? அவனிடத்திலே சரண்புகவேண்டும். பிணம் சுடுதடிபோல நான்வேறு அவன்வேறு என்று இல்லாது ஒன்ருக வேண்டும். இறைவனே வேண்டியவன், வேண்டாதவன் என்று வேற்றுமைபாராட்டா



மல் தன்னைச் சரண் என்று அடைந்தவர்கள் எல்லார்க்கும் அருள் செய்பவன். அப்படி விருப்பு வெறுப்பில்லா இறைவனைச் சரண்புகுந்தால் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளும் சேரமாட்டா. நல்வினை தீவினைக்குக் காரணம் விருப்பு வெறுப்பாகும். விருப்புவெறுப்புக்காரணம் ஆசையாகும்.

ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே.

உலக வாழ்க்கையில் நமக்கு அடிக்கடிவருகிற மனக்கவலைகளை மாற்றுவதற்கு மருந்து அவனது திருப்பாதமே. நமக்கு ஒருமனக்கவலை வந்தால் அதைப்போக்கிக்கொள்ள நம்மைக்காட்டிலும் சிறந்தவனை வேருெருவனிடம் போகின்ருேம். அவன் காலில் விழுந்துகூடக் கேட்டுக்கொள்ளுகின்ருேம். அவனுல் அதுமுடியவில்லையானுல் அவனைக்காட்டிலும் சிறந்தவனென்று இன்னெருவனிடம் அடைக்கலம் புகுகின்ருேம். இப்படிப்பலரிடத்தில் சென்றும் நம்மனக்கவலை நீங்காதபோது எல்லாருக்கும் மேலானவனுன இறைவனது காலைப்பிடிக்கின்ருேம். அவனெருவனுலே தான் எமது மனக்கவலையை நீக்கமுடிகின்றது.

இறைவன் தர்மங்களின் சமுத்திரம். ஆனுல் சாதாரண சமுத்திரம்போல் அலைமோதிக் கொண்டு அமைதியற்ற சமுத்திரம் அல்ல. அசைவில்லாத சாந்தமயமான சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தை அணுகினுல் நமக்கு அறஉணர்ச்சியும் அமைதியும் கிடைக்கும். சகலகுணங்களுக்கும் இருப்பிடமானவன் பகவான் என்பதை உணர்ந்து அவனுக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று அறியாதவனுடைய மூளை இருந்தும் இல்லாதது போல்தான். தெய்வநம்பிக்கையை விடாமல் அவனே கதிஎன்று அவனிடம் சரண் அடைந்தவர்கள் தாம் பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர்.

மனிதன் பிறந்த நோக்கத்தை அறியான். இறந்தபின் செல்லும்மார்க்கத்தையும் அறியான். பிறக்குமுன் எங்கிருந்தான் என்பதையும் அறியான். இவற்றுக்குரிய விடையறி

ந்து மயக்கந்தெளியவேண்டுமானுல் இறைவனது திருவடிஞானமொன்றே வழிகாட்டியாகும். ஆனபடியால்தான் ஜீவராசிகள் எல்லாம் திருவடியாத்திரைக்காரர் என்னும் பெயரைப் பெறுகின்றன. ஜீவகோடிகள் எல்லாம் இறைவனது திருவடியைநோக்கியே யாத்திரை செய்கின்றன. இப்பேருண்மையை உள்ளுறைப்பொருளாகவைத்தே வள்ளுவர் பெருமான் கடவுள் வாழ்த்தில் ஏழுஇடங்களில் திருவடியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.


## மூன்று ஞானிகள்.

வள்ளுவர், காந்தி, விேனுபா ஆகியமூவரைப்பற்றியும் மூன்றுஞானிகள் என்ற தலையங்கத்துடன் புத்தகம் ஒன்று உருவாகி உள்ளது. வள்ளுவர் கருத்துக்கள் பிந்தியஇருவரது வாழ்வுக்குள்ளும் எவ்வாறு புகுந்துள்ளன என்பதைப் பிடித்துக் காட்டுகின்றுர் நூலாசிரியர் திரு. நெரூர் சுப்பரமணியம் அவர்கள். மூவரும் பாரதத்தின் தீர்க்கதரிசிகள் பரம்பரையில் வந்தவர்கள். அவர்களுக்குள் வள்ளுவரே முதலிடத்தையும் முதன்மையிடத்தையும் வகிக்கின்றுர் என்றுல் எந்தத் தமிழ்மகன்தான் ஆனந்திக்காமலிருக்கமுடியும். மூவரையும் ஒரேகண்ணுடியில் காண இந்நூல் வாய்ப்பு அளிக்கின்றது.

**விலை 75 நயாபைசா.** வேண்டுவோர் சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், (தென்இந்தியா) என்றவிலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.




ஓம்

# உலகம் உவப்ப உதித்தது திருக்குறள்.

24. 4. 60 இல் நடந்த கொழும்பு தினகரன் தமிழ்விழாக் கவியரங்கில் ஒலிபரப்பப்பட்டது.

(பரமஹம்ஸ தாசன்)

எல்லை கடந்தும் எதிலும் கலந்தும்உள
வல்ல பரமன் மனங்கொண் டருள்வெளியில்
அண்டங்கள் கோடியமைத் தாடவதி லோர்சிறிய
பிண்டந்தான் பூமி;இதிற் பேராழி சூழ்கண்டம்
ஐந்தாம்; அவற்றினுளே, ஆசியா வேபெரிதாம்.
விந்தைத் துணைக்கண்ட மாய்அதனி லேவிளங்கும்
பாரதத்தில், இன்பப் படைப்பாய், முதல்மனித
வேர்முளைக்கும்தூய விளைநிலமாய்ச்செந்தமிழ்ப்பொன்
நாட்டைப் படைத்திட்ட ஞாலத்தான், வையகத்துள்
ஏட்டுக் கடங்காப்பல் இன்பதுன் பத்தினையும்
வைத்தான்; அவற்றின் வகைதெரிந்த மேதைசிலர்,
''இஃதெல்லாம் ஈசன் எழில்விளையாட்டே, அவனின்
வண்ணக் கழல்சார்ந்து வாழுவதே வாழ்க்கை''யெனும்
உண்மை உணர்ந்து ஒழுகி, அதனைப்பல்
சமய நெறியாகத் தந்தார் உலகிற்கு!
அமர நிலையுணர்த்தும் அருள்நெறியஃ தென்றுலும்
வல்ல தவத்தவர்க்கே வாய்த்தவழியன்றி அது
எல்லோரும் பின்செல்லற் கேற்றதாய்த் தோற்றவில்லை.
புன்மைச் சமயப் புறவேடங் கொள்வதலால்,
உண்மைச் சமயத் தொழுகுவார் எத்தனைபேர்?
அன்றுடம் கஞ்சிக் கலையும் அபலையர்க்குப்
பொன்றுத வேதப் பொருளுரைத்த தாற்பயனென்?

எல்லையற்ற மக்கள்குலம் இவ்வுலகை நன்குணர்ந்து
வல்ல பெருவாழ்வு வாழவழி காணுது,
பொய், களவு, சூது, புலை, கொலை, கட்காமம்,

ஐயுறவு, வஞ்சம், அழுக்காறவா, வெகுளி,
இன்னு வகந்தை, இடுக்கண், மடமை, மிடி,
என்னும் கொடியபல இருட்பேய் வசப்பட்டுத்
தத்தளித்து மாயும் தருணம், பரமன். தன்
முத்தமிழ்ச் செல்வி முகம்நோக்க, முன்மொழியாள்,
பொன்ருத் தமிழ்ச்சங்கப் பூந்தொட்டிலில் வளர்ந்த
என்றென்றும் குன்ரு இளமை எழிலரசி,
பொங்கி யெழுந்து பொருமைக் கடலழித்தும்
மங்காத செல்வ வளம்படைத்த மாதரசி,
தொல்காப் பியம்போன்ற தூய இலக்கணங்கள்
பல்காப் பியமாய்ப் படைத்தளித்த பாவை, உயிர்க்
கற்புக் கனற்சிலம்பி, கனகமணி மேகலையாள்,
அற்புதசிந் தாமணியாள், அழகுவளை யாபதியாள்,
குண்டலகேசி, குளிர்கா வியவிழியாள்,
எண்டிசையும் போற்றும் எழிற்கம்ப நாடகத்தாள்
சிந்தை மகிழ்ந்தாள்; திருமுடிக்குத் தக்கதொரு
விந்தைமணிமகுடம் வேண்டுமென்பதும்உணர்ந்தாள்!
உலகை நினைந்து ஒருகணம் உட்குவிந்து
எழில்முறுவல் ஒன்றை இதழில் தவழவிட்டாள்!
முத்து நகையில் முகிழ்த்தபொய்யா மொழியாய்,
வித்தகப் பொற்கதிர்கள் வீசித்தினகரனுய்,
உலகம் உலப்ப உதித்தது திருக்குறள்தான்!
கலக மடமையிருட் கட்டுக் குலைந்ததம்மா!
அன்பை மலர்த்தி, அருட்தேன் மணம்பரப்பி,
பம்பி அறிவொளியும் பாய்ந்து படர்ந்ததம்மா!
மூவுலகும் போற்றும் முழுமுதல்போல் மொய்த்தகுறட்
பாவடியை வையம் பணிந்துவர வேற்றதம்மா!
கொஞ்சும் அழகுமொழிக் கோதையர்கள் பற்பலரும்
தஞ்ச மடைந்து தமதாக்கிப் போற்றலுற்ருர்!
உய்வோம் இனியென்றுரைத்துப் பணிந்தேத்தி
வையம் புகழ்ப்பொன் மலர்துவி வாழ்த்தினகான்!
அகரம் எழுத்தனைத்தின் ஆதியாய் நிற்பதுபோல்
மகிதல வாழ்விற்கு வாய்த்த முதன்மறையாம்!
சாதிமத நாடுநிறத் தாழ்வுயர்வுப் பேதமற்ற



நீதிநெறி காட்டும் நிகரில் தமிழ்மறையாம்!
உள்ளத்தாற் பொய்யா தொழுகி, உலகத்தின்
உள்ளத்தி லெல்லாம் ஒளிரும் பொதுமறையாம்!
எப்பாலும் எந்நாடும் எம்மதமும் எவ்வுலகும்
ஒப்பிமகிழ்ந் தேற்ற ஒருவாழ்க்கைப் பேரறநூல்!
வாழ்க்கை நுணுக்கம் அனைத்தும் வகுத்தெடுத்து
ஏக்கத் துழல்வார்க் கினிதுணர்த்தும் பேரருள்நூல்!
அன்பும் அறமும் அருளுமே இல்வாழ்க்கைப்
பண்பும் பயனுமெனப் பாருக் குணர்த்திடுநூல்!
பழுதுண்டு மற்றப் பணிக்கெல்லாம் என்றுணர்த்தி
உழுதுண்டு வாழ்வார்க் குயர்வுதரும் ஒப்பருநூல்!
அருளால் உவந்தீந் (து), அறத்தாற் பொருளீட்டி,
மருவற் றிருவர் மனங்கலந்த காதலினுல்
இன்புற்று வாழும் இயல்பமைந்தார், இறைவன்
இன்பவீ டெய்தல் இயல்பென்று காட்டிடுநூல்!
அப்பால் உளவீ டதனை அகத்தடக்கி
முப்பால் அமுதாய் முகிழ்த்த தமிழ்ச்செல்வம்!
வாழ்க்கைத் துணையாய் மறுமைக் குறுதுணையாய்க்
காக்கப் பிறந்த கனகமணிக் காவலனும்!
மக்களைப் போன்றுலகில் வாழும் கயவர்தமைச்
சிக்கென்றிடித்துத் திருத்தும் உயிர்த்தோழன்!
வண்ண முகம்திருத்த வாய்த்த பளிங்கினைப்போல்
எண்ணம் தனைத்திருத்தற் கேற்ற அகக்கண்ணுடி.
வண்ணத் தமிழரசி வான்புகழும் பேரரசி
என்னத் தனைப்பெற்ருட் கேற்றம்அருள் கண்மணியாம்
ஆயிரத்து முன்னூற்று முப்ப தருங்குறளாம்
தூய மணிமகுடச் சோதி யினுல் நீதிமுறை
ஆளும் தமிழ்த்தாய் அரசென்றும் வெல்கவென்று
வாழ்த்திப் பணிவோம் மகிழ்ந்து !

# தன்வாழ்வும் - சமூகவாழ்வும்

கா. பொ. இரத்தினம் தலைவர் தமிழ்மறைக்கழகம்

இன்பத்தை நாடுவது உயிர்களின் இயல்பு என்கின்றனர் அறிஞர்கள். மக்கள் யாவரும் இன்பத்தை நாடி அலைவதை நாம் நாடோறுங் காண்கிறோம். மக்கள் இன்பத்தைப் பெறும் வாயில்கள்பலவாகும். தாம் தாம் விரும்பியதன் வாயிலாக இன்பத்தைப் பெறுதற்கு மக்கள் முயல்வது இயல்பு. குழந்தைகள் விளையாட்டுக்களின் வாயிலாக இன்பம் பெற முயல்வர்; கலைஞர்கள் கலைப்படைப்புக்கள் வாயிலாக இன்பம் பெற முயல்வர். போர் வீரர் போரிலே செய்யும் மறச் செயல்களால் இன்பத்தைப் பெற முயல்வர். களவு முதலிய பாதகங்களைச் செய்பவர்கள் அவற்றைச் செய்வதால் இன்பத்தைப் பெற முயல்வர். இவ்வாறு பலரும் பலவாயிலாக இன்பத்தைப் பெற முயல்வதால் இவர்களுக்கிடையிலே போட்டியும் பூசலும் மாறுபாடும் உண்டாகிவிடுகின்றன. சிலவாயில்கள் சமூக வாழ்வுக்கு மாறுபட்டனவாகவும், சில வாயில்கள் தன் வாழ்வுக்கு மாறுபட்டனவாகவுமிருக்கின்றன.

எனவே, இன்று தன்வாழ்வு, குடும்பவாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்வு என்பவற்றில் உண்டாகும் போட்டி பூசல்களுக்கும், பொறாமை புழுக்கங்களுக்கும் மக்கள் தகாத வாயில்களால் இன்பம் அடைய முயல்வதே அடிப்படைக் காரணமாகும்.

மக்கள் வாழ்வை ஒவ்வொருவராக வாழும் தன்வாழ்வு என்றும் எல்லோரும் கூடிவாழும் சமூகவாழ்வுஎன்றும்இருபெரும் பிரிவாகவும் பிரிக்கலாம். இந்த இருவகை வாழ்வும் இசைந்து சென்றால் இவ்வுலகில் இன்பமும் அமைதியும் என்றும் நிலைத்து நிற்கும். இரண்டும்மாறுபட்டு முட்டிக்கொண்டால்துன்பமும் துயரும் நிறையும். எனவே, இந்த இரன்டையும் முரண்படாமல் நடத்த மக்கள் பயின்று கொள்ளல் வேண்டும். தனக்கும் சமூகத்துக்கும் நல்லதை அறிந்து முறையாக வாழுதலையே



வள்ளுவர் பெருமான் "வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி" என்கிறார்.

சமூகத்துக்குஎவ்வித இடர்ப்பாட்டையும் உண்டாக்காத முறையில் ஒருவன் இன்பத்தை அடைய முயல்வதிலே பிழையில்லை. சமூகத்துக்கு இடர் விளைவிக்கும் எதனையும் தன் இன்பம் கருதிச் செய்தல் கூடாது. இவ்வாறு பலர் செய்வதாலேயே தன்வாழ்வும் சமூகவாழ்வும் கேடடைகின்றன. எனவே மனிதர் தாம் செய்யும் ஒவ்வோர் அலுவலையும், பிறருக்கு - சமூகத்துக்கு - எவ்வித இடரையும் விளைக்காது என்று ஆய்ந்தறிந்தபின்னரே செய்தல் வேண்டும்.

பொய், கொலை, களவு முதலியன சமூக வாழ்வைப் பாதிப்பன வாதலின் இவற்றை ஒழிக்குமாறு உலகத்திலே அறங்கூற முற்பட்ட நூல்கள் யாவும் உரைத்துள. இவற்றை ஒழிக்க வேண்டுமென்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

இவற்றைப்போல ஒழிக்கப்பட வேண்டியன பலவுள. தீண்டாமை பாராட்டுதல், நிற வேற்றுமை பாராட்டல், வாழ்தற்கு வகையின்றிப் பலர் வாடச் சிலர் பொருளைக் குவித்துக் குபேரராக வாழுதல், சமயப் பூசல்கள், மொழிப் பூசல்கள், வகுப்பு வாதங்கள் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றை ஒழித்தற்கு எல்லோரும் முயலுதல் வேண்டும். இந்த முயற்சியில் அளவுக்கேற்பவே தனிவாழ்வும் சமூகவாழ்வும் சிறப்படையும்.

இன்று தமிழினத்தின் வாழ்வைச் சிதைத்துப் பாழாக்குவனவற்றில் சாதி வேற்றுமைகளைப் பொருட்படுத்தித் தீண்டாமை பாராட்டுதல் தலையிடம் பெற்றுளது. தீண்டாமை பாராட்டுதலை ஒழித்தாலன்றித் தமிழரில் தன்வாழ்வும் சமூக வாழ்வும் சிறப்படைதற்கு வாய்ப்புண்டாகாது.

அரசியற்றுறையிலும் தன்வாழ்வை வளப்படுத்துதற்குச் சமூகவாழ்வைப் பாதிக்குஞ் செயல்களைச் செய்யச் சிலர்

முற்படுகின்றனர். இதனாலும் தமிழினத்தின் வாழ்வு பெரிதும் பாதிக்கப்படுகிறது.

தன்வாழ்வை வளம்படுத்த முயல்வது போலச் சமூக வாழ்வையும் ஒவ்வொருவரும் வளம்படுத்த வேண்டும். சமூக வாழ்வு எப்படிப் போனாலும் தன்வாழ்வு சிறந்தாற் போதும் என்று எண்ணுகிறவர்கள் சமூகத்துரோகிகளாவர்.

இன்று தமிழர் பலர் இனவாழ்வைப் பற்றிச் சிறிதுஞ் சிந்தியாது தன்வாழ்விலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். இதனாலேயே தமிழினம் நல்வாழ்வு வாழ முடியாது தவிக்கிறது.

சமூகத்திலே பெரியார்கள் எனப் போற்றப்படுவோர் சமூக வாழ்வினைத் தம் சொற்களாலுஞ் செயல்களாலுங் கெடுத்துவருகின்றனர். தாம் அறிந்த உண்மையை உரைக்கத் தக்க நெஞ்சுறுதி இவர்களிற் பலரிடம் இல்லை. சமூகத்துக்கு கேடுவிளைக்கும் கண்மூடிப் பழக்கவழக்கங்களை ஒழிக்க முயல்வோர் மிகச்சிலரே. இப்பழக்கவழக்கங்களைத் தழுவுவதால் மக்கள் எண்ணத்திலே பிறழ்ச்சி உண்டாகிறது. இதனால், அவர்கள் நன்மை தீமைகளுக்குள்ள வேறுபாட்டைஉணராது வாழும் பழக்கத்துக்கு அடிமையாகின்றனர். தீமைகளைக் கண்டு பொங்கும் உளப்பாங்கு அவர்களிடத்து இல்லாமற் போய்விடுகிறது.இந்நிலைமையை ஒழித்தற்குச் சமூகவாழ்வினை உயர்த்த முயல்வோர் உழைத்தல் வேண்டும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெருமான் தாம் பிறந்த குடியை – குலத்தை – உயர்த்துதல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடன் என உரைத்துளர். "குடிசெயல் வகை'' என்ற அதிகாரத்தில் தம்முடைய கருத்துக்களை அவர் எடுத்துக் காட்டியுளர். தன்வாழ்வை மட்டுமன்றித் தமிழினத்தின் வாழ்வையும் உயர்த்த முயலுதல் தமிழர் ஒவ்வொருவரதும் முதற் கடமையாகும் என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்து வாழ்தல் வேண்டும்.

குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு – தமிழ்மறை 1025



# திருவள்ளுவர்

[ நெரூர் சிவசுப்பிரமணியம் ]

தமிழ்நாட்டில் தோன்றிய தத்துவதரிசிகளுள் வள்ளுவரே முதலிடம் வகிக்கின்றார். அவர் நூலாகிய திருக்குறள் அளவில் சிறியதேயாயினும் மனிதனுக்கு ஆகும் அறிவையெல்லாம் நிறைவாகப் பெற்று அமைவதொன்று. அது தமிழ் இலக்கியங்கள் பலவற்றிற்கும் முதனூலாகவும், அறநூலாகவும், சமுதாய அமைப்பு நூலாகவும் பலவிதத்தும் தோற்றம் அளிப்பது. அவர் போதனைகளைக் கொண்டு அவர் சித்திரித்த சமுதாயம் இது, இது எப்படி மனிதனை மேலெழ வழி வகுக்கின்றது என்பதை ஆராய்வது பயனுடையதாகும். இன்று உலகம் விஞ்ஞானம் முதலிய பலசாதனங்களால் உருமாறி நிற்கிறது. நாகரீகம் மிகவளர்ந்ததாகக் கருதப்படும் இன்று மனிதசமுதாயம் நிறைவும் அமைதியும் இல்லாமல் மிகவும் அல்லற்படுகின்றது. பண்டையில் சீரமைப்பு மிகஅவசியமாயிற்றோ இல்லையோ இன்று சீரமைப்பு இன்றேல் மனிதவாழ்க்கை ஒருகணமும் கூடாதநிலை தோன்றியுள்ளது. இந்நிலையைப் பரிகரிக்க பிறநாடுகளில் பலமுயற்சிகள் எழுகின்றன. நாம் அவைகளையெல்லாம் இங்கு ஆராய்வதெனில் அதுநீண்டுவிடும். இந்நாட்டில் சென்ற நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சீர்கேடு வளர்ந்து வருகின்றது.அதைமாற்றவும் அமைதியையும் மேம்பாட்டையும் நிலைக்கப் பல பெரியார்கள் முயன்று வந்துள்ளார்கள்.அவர்களில் ஓரிருவரை மட்டும் மகாத்மா காந்தியடிகளையும் அவர்சீடர் விநோபாபாவே அவர்களையும் இங்கு ஆராயப்புகலாம். அவர்களும் ஆன்றோர் மரபில் அமைவதால் அவர்களை நம்தமிழ்மறைவகுத்த திருவள்

ளுவருடன் ஆராய்வதையே இச்சிறுநூலின் பொருளாகக் கொள்ளப்படுகின்றது.

தமிழ்மறை நல்கிய புலவர் திருவள்ளுவர் உலகை உய்விக்கவந்த பெரியார்களில் ஒருவர். அவரது சரிதம் இற்றென தெளிவு பட்டதொன்றன்று. அது பல கர்ணபரம்பரைக் கதைகளின் கோவையாகவே அமைகின்றது. அவைகளைப்புறத்திட்டு அவர் உதவியுள்ள நூலைக்கொண்டு அவரை ஓரளவிற்கு யாரென அளவிடலாம். உலக அறிவைப் பலதுறைகளிலும் பேரளவில் பெற்றவரென்பதை அவர்நூல் வெளியிடுகின்றது. உழவன் எருவிடுதல், தூதுவன் தூதுரைத்தல் அரசனது மாண்பு, தானை போர்முனையில் அணிவகுப்பது இவைபலவும் அவரால் தெளிவாகக் கூறப்படுகின்றன. அதே போன்று இளமையில் காதல் செய்தல், அது இல்லறமாகமிளிர்வது, முதுமையில் துறந்து மெய்யறிவு பெறுதல், இவையும் நுட்பமாக விளக்கப்படுகின்றன. இவைகளைக் கொண்டு அவர் கல்வியின் கரைகண்டவர், பேரறிஞர், வாழ்க்கையை முறைப்பட நடத்தியவர், ஆன்றவிந்தடங்கிய பெரியார் என்பதை நாம் துணிகின்றோம். அவர்பேரிலக்கியம் எழுதவில்லை. சிறுநூல் குறளையே எழுதியுள்ளார். ஆயின் அந்நூல் மனிதன் ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையின் பலபகுதிகளிலும், பல சந்தர்ப்பங்களிலும் வாழ்க்கையை நிறைகாக்க வேண்டியஎல்லா அறிவையும் புகட்டுவதாக நிற்கின்றது. வாழ்க்கையின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பெறுதல். அப்பயன் முற்றுமாகப் பெற உதவுவது திருக்குறள். சிறுகுறட்பாக்களின் எளிய மொழியில் விரிவுரைகளின் விளக்கமின்றி பலருக்கும் பொருள் விளக்குவதாயுள்ள குறட்பாக்கள் 1330 கொண்ட நூலே திருக்குறள்.

அந்நூல் தமிழில் ஒரு தொன்னூலாகவும் முதல் நூலாகவும் நிற்கின்றது. பின்னெழுந்த பல நூல்களிலும் அதன் பொருளும் நடையும் தெளிவும் ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. எப்பெருநூலும் திருக்குறளைக் குறிப்பிடா



மலோ,அதன் பகுதிகளைத் தன்னுள் பொருத்தாமலோ இருப்பதில்லை. அதனாலேயே அது, மறைபோன்ற சிறப்புடன் திகழ்கின்றது. அந்நூலை அவ்வப்பொழுது தமிழர் முழுதுமாகப் பயன் படுத்திமேம்பாடடைந்துள்ளார்கள். தமிழர் பண்பாடு என்று தமிழர் தம்மைச் சிறப்பித்துக் கொள்வதெல்லாம் இந்நூலினின்றே உண்டாயது என்று கொண்டால் மிகையாகாது. அன்றுமட்டுமன்று இன்றும் பயன்பட உள்ளது இந்நூல். குறட்பாக்கள், வாழ்க்கைச் சூத்திரங்களாக அமைகின்றன. இந்நிறைந்த நூல் மனிதனுக்கு உற்றுழி உதவியும் இழுக்கலுடையுழி ஊன்றுகோல் போலமைந்தும், உடுக்கை இழந்தவன் கைபோன்றும் இடுக்கண்களைய உதவி நிற்கின்றது இத்தனிப்பெருமை அது பெறுவதால் அதைப் பல சமயத்தவரும் பாராட்டி நிற்கின்றார்கள். அறிவு பெற்றோர் அதற்கு விரிவுரைகளை எழுதுகின்றார்கள். அதைமறுப்பவர் யாருமில்லை. என்றும் தனிச்சிறப்புடன் நிற்பது அது. சமயாசாரியார்களையும் தத்துவதரிசிகளையும் ஆன்றோர்களையும் எள்ளி நகையாடுபவர்களும், திருவள்ளுவரை அவ்விதம் செய்வது கூடாமல் அவர் தம் கருத்துக்களை அவருக்கும் ஏற்றிப்பொருத்த அவர் நூலிற்கு தம்வழி விரிவுரைகளையும் எழுதுகின்றார்கள். அவர்களும் திருவள்ளுவரின், அநுமதியைப் பெற்றவர்களாகத் தோற்றமளிக்க முயல்கிறார்கள். ஆயின் இவர்களால் திரிக்கப்படா அளவில் தெளிவும் நிறைவும் கொண்டுள்ளது திருக்குறள்.

( மூன்று ஞானிகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது )

உலோபியைப் போல் உள்ளம் நிறைந்த உண்மையும் ஓலைக் குடிசையிலே வாழ்கின்றது.

— ஷேக்ஸ்பியர் —

## சுத்தானந்தரின்

# கடிதங்கள் 10

ஸ்ரீரங்கம்

அருமை நண்பரே

இங்கே வைஷ்ணவ சித்தாந்தம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தேன் நம்மாழ்வாரின் பாசுரத்தில் மூழ்கியிருந்தேன். இப்படியே தவத்திலும் பரமாத்மா ஐக்கியத்திலும் அவன்மயமான ஜீவேசரின் கைங்கர்யத்திலும் வாழ்க்கை சென்ருல் நல்லதென்றே நினைத்தேன். காசி, பிருந்தாவனம், பத்ரிநாராயணம் முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்யவும் முனைந்துள்ளேன். இறைவன் திருவுளம் வேருெரு பணிக்கு ஆணையிடுகிறது. என் அரிய நண்பர்ஸ்ரீ ஜீ. சுந்தரமையர், தேவகோட்டையில் தேசிய கலாசாலை நாட்டி என்னை அழைக்கிருர். ஐம்பது ரூபாய் சம்பளம் பேசி ஒப்புக்கொண்டு விட்டேன். கட்டுப்பாடற்ற தேசிய கலாசாலையாதலால், வந்தே மாதர கோஷத்துடனும் இராட்டினத்தின் ஓங்காரத்துடனும், கீதா நாதத்துடனும் கல்வி நடக்கும் என்றே நினைக்கின்றேன். ஸ்ரீ சுந்தரமையர் பெரிய அறிவாளி தேசபக்தர், நட்பிற்கினியவர் ஆதலால் நான் மீண்டும் தெற்கே வரக் காலெடுக்கிறேன். அடுத்த புதன்கிழமை மதுரையில் தங்களைச் சந்திக்கிறேன்.

நான் இதுகாறும் எழுதிய நூல்களையெல்லாம் ஓர் அரிய நண்பரிடம் கொடுத்துவைத்துள்ளேன். ஏனெனில் என் வாழ்க்கை, சாதனைக்கும் ஆத்மசோதனைக்குமே எங்கெங்கோ சென்று கொண்டிருக்கிறேன். அவர் குறித்த சமயத்தில் எல்லாம் கவனமாகத் திருப்பி அனுப்புவார். வனவாசம் செய்த அர்ஜுனன் ஆயுதங்களை மரப்பொந்தில் வைத்துச் சுற்றியது போல் நானும் எனது நூல்களை அன்பர் வீடுகளில் வைத்துச்



சுற்றுகிறேன். அவை கறையானுண்டு அழிந்ததுபோக இருந்தமட்டும் லாபம். மகான்களுடைய திருவாக்குகள் எத்தனையோ, மூவர் தேவாரங்கள் எத்தனையோ, தமிழ்க்கலை நூல்கள் எத்தனையோ அழிந்தொழிந்தன. எனது எழுத்து உலகிற்கு ஏதாவது பயனுகும் என்பது இறைவன் இச்சையானுல் எல்லாம் அவன் பாதுகாப்பிலிருக்கும். எனது பேர் புகழுக்கும் சுயநலத்திற்கும் அவை எழுதப்பெற்றதெனில் அவை அழிவதே நலம். பேனுவிலிருந்து பூத்த மலர்களெல்லாம் இறைவனுக்கே அர்ச்சனையாகட்டும் நான் எழுதுவது எனது வாழ்விற்கொரு ஞானசாதனம்; மனித சமுதாயத்திற்குச் செய்யும் கைங்கரியம். இறைவனை மகான்கள் எப்படி அறிந்தார்கள் என்று நான் ஆராய ஒருவழி. சீனத்து மகான் லவோத்ஸன் போல் அந்தர்முகப்பட்டுபரமோனியாக இறைவனை இரண்டறக்கலந்து ஆளே தெரியாமல் ஏகாந்தமாகயிருந்தாலும் நல்லதுதான் என்று தோன்றுகிறது.

ஏதோ என் மனதில் உதித்ததைப் பேனுமுனையில் நகாசு செய்து தங்களைப் போன்ற நண்பர்களிடம் தந்துவிட்டுக் காற்றைப்போலத் திரிகிறேன். என்னை மறந்தாலும் என்னுள்யானுயிருக்கும் உங்கள் அந்தராத்மனை மறவாதீர்கள். ஓம் தத்ஸத் !

---

தேவகோட்டை

நண்பா

எனது பாடல்களைத் தாங்கள் மாணவருக்குச் சொல்லிவைப்பது பற்றி மகிழ்கிறேன். அவை தமிழகத்தில் பரவ இன்னும் காலம் வரவில்லை. என் வாக்கும் கனியவேண்டும்.

நிற்க, இங்குப் நான் சாரணரைப் பயிற்றிவருகிறேன். ஆனுல், எனது தேசாபிமானம் அவர்களுக்குக் கதர் அங்கிதான் தருகிறது. மாணவர் இங்கே அழகாக நிற்கின்றனர். நானும் அவர்களுடன் நிற்கிறேன். சுற்றிலுமுள்ள கிராமத்திலிரு

ந்து நானும் ஸ்ரீ சங்கரையர் என்ற நண்பரும் நூல்கண்டுகள் வாங்கிவருகிறோம். சின்ன மைனர் வீட்டுக் கொல்லையில் தறி வைத்து நெய்கிறோம். நாங்கள் நூற்ற கதரையே அணிகிறோம். சாரணருக்கு இது முதற்பாடம், சுதேச விரதம் தன்னுதவி.

நானும் காலை மாலை ஒழிந்த போதெல்லாம் மக்கம் ஓட்டிப் பழகுகிறேன். ஆனாலும் அதெற்கென்று பிறந்த சௌராஷ்டிர லிங்கையாவின் பொறுமை எனக்கு இல்லை.

சாரணர் சுதேச கீதங்கள் நன்றாக பாடுகிறார்கள்; திருவிழாக்களில் தொண்டு செய்கிறார்கள். ஸ்கௌட் ( Scout ) பத்திரிகையில் சமீபத்தில் அவர்கள் பலி நிறுத்தம் செய்ததை பற்றிப் படித்திருப்பீர்கள். காளி கறுப்பன் என்று கல்லைநட்டுஆடுகோழி பலியிடும் இரத்தபூஜைஅடியோடுஒழிய வேண்டும். இது மூடப்பழக்கம். இப்படி நடக்குமிடங்களில் கல்லை எடுத்தெறிவது நல்லது. கோயில்களெல்லாம் கலாசாலைகளாய்விட்டாற்கூட நல்லதென நினைக்கிறேன்.

சமீபத்தில் சில தலங்களுக்குச் சென்றிருந்தேன். திருப்பெருந்துறைக்கும் சென்று மாணிக்கவாசகரைத் தரிசனம் செய்தேன். கோயில் இருள் அடர்ந்திருக்கிறது. கடவுட்சிலைகள் மெழுக்குப் பிடித்து நாறுகின்றன. கர்ப்பக்கிரகத்தில் மனிதன் நிற்க முடியாது. சாமி எப்படித்தான் இருக்குமோ? சர்ச்சுகள் ஜைனமந்திரங்கள் போலக் காற்றோட்டமாகக் கோயில்களை அமைத்து சுத்தமான சலவைக்கல்லால் தெய்வ தத்துவங்களைத் துலக்கும் நடராஜா போன்ற வடிவங்களை நாட்டி, கல்லை நினைக்காமல் அதன் உட்பொருளைத் தியானிக்கும் படிக்கும், அருட்பாடல்கள் பாடி வழிபடும்படிக்கும் நம்மவரைப் பழக்க வைக்கவேண்டும். உணவு நிவேதனங்கள் வெளியே ஒரு ஹாலில் வைத்து ஏழைகளுக்கு விநியோகமாக வேண்டும். கடவுள் பெயரால் பிரமசாரிகளுக்கும், கல்விமான்களுக்கும்,தொழிற்புலவருக்கும் ,வேதபாரகருக்கும் உணவளிப்பதே சிறந்த நிவேதனமாகும். கோயிலில் குறித்த நேரம்



மணியடித்ததும் அன்பர் வந்து முறையாகத் தோத்திரம் செய்து செல்ல வேண்டும். வணங்குமிடந்தவிர மற்ற இடங்களில் தமிழும் ஆரியமும் ஆங்கிலமும் சமயநூல்களும்புகட்டும் சன்மார்க்கப் பிரசாரகர்களைத் தயாரிக்க வகுப்பு நடத்த வேண்டும். மனிதர் அனைவரும் சாதிமத வேறுபாடில்லாமல் வந்து வணங்கச் சம்மதிக்க வேண்டும். அப்படியானால் நமது கோயில்கள் உருப்படும். இன்றேல் வருங்காலத்தில் அவற்றிற்கு மதிப்பிராது. நாம் சிதம்பரத்தில் நடராஜ தரிசனம் செய்தபோது கோயில் விஷயமாகப் பேசினோம். இப்போது என் கருத்து இப்படி மாறியிருக்கிறது. சாரணரும் காலை மாலை என்னுடன் தியானமும் கடவுள் வணக்கமும் செய்கிறார்கள். நான் எங்கே குழலூதினாலும் அவர்கள் வந்து உதவுவார்கள். சிலர் இந்தி கற்கிறார்கள். தினம் ஏதாவதொரு பரோபகாரம் உண்மையாகச் செய்கிறார்கள். அனைத்திலும் மிக்கது தேசபக்தி. சாரணர், பத்திரிகை மூலம் உலக நடப்பை அறிந்து எனக்குக்கூடச் செய்தி சொல்லுகிறார்கள். ஒவ்வொரு சாரணனுக்கும் இந்திய சரித்திரமும் காங்கிரஸ் செய்தியும் தெரியும்.

வாராவாரம் நாங்கள் சுற்றுக்கிராமங்களில் முகாம் போட்டு அங்கேயே எல்லாரும் சமைத்துச் சாதிவேறுபாடில்லாமல் உண்டு கிராமசேவை செய்து, உயர்ந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு வருவோம். ஒரு நடைப்பள்ளிக்கூடமாகவே எங்கள் வாரஉலா நடக்கிறது. தங்கள் சாரணருக்கும் இப்படி தேசபக்தியும் பொதுநல சேவையும் பழக்க வேண்டுமென்றே இவ்வளவும் எழுதினேன். தமிழன் தமிழையும் தமிழ்நாட்டையும், தன்னவரையும் மறக்கக்கூடாது; இந்தியனும் அவ்வாறே. தமிழரான நாம், தமிழ்வீறுடன் பாரதமாதா கைங்கரியம் செய்வோம். வந்தேமாதரம் அன்புள்ள

---

Rev. H A. பாபுலிதுரை அவர்கட்கு

தேவகோட்டை

அன்பிற்குரிய மாண்புள்ள ஸ்ரீ பாபுலி அவர்களுக்கு

பரமபிதா

நலமருளுக! தங்களை சிவசுப்பிரமணிய ஐயர் என் ஸயன்ஸ் ஹாலுக்கு அழைத்து வந்ததுமே 'இவர் உத்தம நண்பர்' என்று அந்தராத்மா சொல்லியது. "என் அறநூலை" மெச்சித் தாங்கள் எழுதிய கடிதத்தைக் கண்டதும், இறைவன் கருணைக்கு நன்றி செலுத்தினேன்!

எனது ஞானத்தெளிவுக்குத்தான் நர்ன் ஏதோ பாடி எழுதிக் குவித்தேன்; முதலில் ஒரு நாடகமும் சில பாடல்களும் வெளியிட்டேன். அவற்றை இரண்டொரு ஆப்த நண்பர் தவிர வேறு யாரும் பாராட்டவில்லை. இன்னும் சமயம் வரவில்லை என்று மறுபடியும் மறைவில் மௌனமாக எனது பேனா ஆடிக்கொண்டிருந்தது. சிறிதுகாலம் பொறுத்தே எனது நூல்களை வெளியிடத் துணிவேன். ஏனெனில், எனது ஞானத்தாகம் இன்னும் தணியவில்லை. நான் ஞானஅருவி யானலன்றோ உலகம் அள்ளிக் குடிக்கமுடியும்? ஏசுநாதர் சரிதையை உரிய காலத்தில் தங்களுக்கு அனுப்புவேன்.

நமது நட்புரிமை பரமபிதாவின் அருளால் மேன்மேலும் வளம்பெற நான் எங்கே சென்றாலும் அவ்வப்போது தங்களுடன் அளவளாவிக்கொண்டிருப்பேன். அறநூலுக்கே 'யோகசித்தி' என்ற பெயரைத் தருவதாகயிருக்கிறேன் அதற்கு எனது யோகசாதனம் இன்னும் தீவிரமான பயனைக்காணவேண்டும். இறைவன் செயலுக்கு நான் சுத்தமான கருவியாயிருத்தலே என் இச்சை; நான் யாழ்;அவன் யாழோன். நான் எழுதுகோல்; அவன் எழுதுவோன். நான் உள்ளம்;அவன் அதில் உயிர்க்கும் அன்பு.அன்புஎன்னுள் அன்பாயிருக்கும். ஆண்டவன் தங்களுள் அன்பாக வளர்கிறான். அன்பும் கூடி அருட்பணிசெய்க. எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே, எல்லா உடலும் இறைவன் ஆலயமே. ஓம், ஆமன்! ஆம் அவன்.



# கொடுங் கோலாட்சி கெடுங்கோலாட்சி

கொடுங்கோல் செலுத்திக் குடிகளை அச்சுறுத்தி துரியோதனன், நீரோ, கம்சன் போல வாழும் அரக்கரின் "சைத்தான் இராஜ்யம்" தனது கொடுமையாலே குமையும். மன்னருக்கு அரசும் புகழும் நிலைபெறுதல் எதனால்? செங்கோலால். அறநெறிச் செங்கோல் இல்லாமல் கொடுமை செய்தால், மன்னரின் புகழும் ஒளியும் மன்னாது, நிலைபெறாது, மங்கியணைந்து போகும்.

**மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; யஃதின்றேல்**
**மன்னாவா மன்னர்க் கொளி.**

கடுவரிகளாலும், அடிமைச் சட்டங்களாலும், அடக்குமுறைகளாலும் அநீதியான தண்டனைகளாலும், வீண்போர்களாலும் குடிகளை அலைத்துச் சீரழித்து, அறமில்லாத செயல்களைச் செய்யும் மன்னன் கொலையாளியை விடக் கொடியன். அவன் தனது கொடுங்கோலால் குடிகளைச் சித்திரவதை செய்கிறான். கொடுங்கோல் பிடித்து, போடுவரி; செய் அதை! என்று குடிகளைக் கொடுமையாக அதிகாரஞ் செய்து கேட்போன் "கொடு உள்ளவெல்லாம்; இன்றேல், குத்துவேன்" என்று வேல்காட்டி நின்று பயமுறுத்தும் வழிப்பறித் திருடனுக்கே இணையாவான்.

**வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்**
**கோலொடு நின்றா னிரவு.**

இவ்வாறு முறைதவறிக்கடுமையாக வரிகளை வாங்குங் கொடுங்கோலாட்சியின்கீழ், செல்வனாயிருப்பது வறுமையைக் காட்டிலும் துன்பமாகும். அரசன்விடாமற் பணம்கேட்பான்; தராவிட்டால் கொடுமை செய்வான். இந்த வரிக்கொடுமையாலே தான் பெரும்பாலுங் குடிகளின் பகைமுற்றி அரசன்

அழிவது. இங்கிலாந்தில் சார்லெஸ், ஜேம்ஸ், ரஷ்யாவில் ஜார் பிரான்சில் லூயி ஆகியோர் ஆட்சிகள் உதாரணம். நமது ஆட்சிமுறையில் இன்ன குறைகள் உள்ளன; "அவற்றை இந்த வழியில் தீர்த்துக் குடிகளை மகிழ்விக்க வேண்டும்" என்று மன்னன் நாடோறும் ஆராய வேண்டும். பெரியோர்களையும், மந்திரிகளையும், நாடி அவர்கள் சொல்லும் நன்முறை தழுவி நலஞ்செய்ய வேண்டும். அப்படியின்றித்தான் தோன்றித்தனமாக ஜார் போலக் கடுவரியும், கொடுவினையுங் கொண்டு ஆண்டால், அத்தகைய கொடுங்கோல் மன்னன் நாளுக்கு நாள் நாட்டையிழந்து கெடுவான். பதினாறும் லூயி இதற்கு உதாரணம். அவனது கொடுமையால் பிரெஞ்சுக் குடிகள் சுதந்தர வெறிகொண்டு புரட்சி செய்து, அரசனைத் தூக்கிட்டுக் குடியரசு நாட்டினர். தனது கொடுமையின் விளைவைக் கருதாது, முறைதப்பி, அதர்மம் செய்யும் அரசன் தனது செல்வத்தை இழப்பான்; அரசை இழப்பான். "ஐயோ கொடுங்கோல் தாங்கமுடியவில்லையே! தெய்வமே, காப்பாற்று! என்று அல்லற்பட்டுத்தாங்க முடியாது, ஏழை எளியவர் அழுத கண்ணீரே, மன்னன் செல்வத்தைத் தேய்க்கும் வாட்படையாகும்.

**அல்லற் பட்டாற்று தழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.**

மழைத்துளியில்லா நிலம் எப்படித் தழைக்காதோ, அப்படியே அன்பில்லாத கொடியன் கீழ் வாழும் உயிர்களும் தழைக்கமாட்டா.

— திருக்குறளின்பம்.

---

தத்துவ ஞானத்தை 'அறிவை அறியும் அறிவு' என்பர். ஆனால் உண்மையில் அது அறியாமையை அறியும் அறிவே ஆகும்; அல்லது காண்ட் கூறுவது போல் அது அறிவின் எல்லையை அறியும் அறிவே ஆகும்.

— மாக்ஸ்முல்லர்

---



# எது இழிவு?

( திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் )

எது இழிவு? என்று வள்ளுவர் சொல்லுவதற்கு முன்பு ஒரு புலவன் சொன்னான். அவன் சொன்னதைச் சொல்லிச் சொன்னால் தான் உங்களுக்குச் சுவைக்கும். எது இழிவு? எது இழிவு? என்று எதை எதையோ இழிவு என எவனெவனோ சொன்னான். பிரித்தானியன் சொன்னான் எங்களுடைய கொடியிலே இருள் பட்டால் இழிவு என்று. யேர்மனியன் சொன்னான் காலனி இல்லாமல் வாழுகிறது யேர்மனிக்கு இழிவு என்று. உருசியாக்காரன் சொன்னான் உழைக்கிறவன் உழைக்காதனுக்குக் கீழே இருந்து வரிசெலுத்திக் கொண்டு வாழ்வது மிகவும் இழிவு என்று. யப்பான்காரன் கூறினான் உலகத்திலே வணிகத்திலும் கைத்தொழிலிலும் சிறந்திருக்கும் யப்பான் அது செய்த பொருளை உலகத்திலே விற்பதற்குச் சந்தையில்லாமல் இருக்கிறதே, அது உலகத்தாருக்கு இழிவு என்று சொன்னான். தனக்கு இழிவு என்று அவன் சொல்லவில்லை. உலகத்திலே வணிகத்திலும் கைத்தொழிலிலும் சிறந்த நாடுஎன்று ஒப்புக்கொள்ளப்பட்ட யப்பான் அது செய்த பொருளை உலகத்திலே விற்கக்கூடாதென்று சொன்னானே அது உலகத்தானுக்கு இழிவு. எங்களுக்கு என்ன? என்று கூறிப்போனான் அவன். சீனாக்காரன் நண்டு, நத்தை, பாம்பு, முதலியன தின்று, உலகத்திலே இழிவு என்று ஒன்றுமே இல்லை என்று கூறி, எல்லாமே தின்னத் தொடங்கினான்.

நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், கொல்லை அள்ளு

வதும் சாக்கடைதள்ளுவதும் தான் இழிவு என்று, பழம்தமிழ்ப்புலவனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சென்று எது இழிவு? என்று கேட்டால், ஒன்றுதான் இழிவு என்றான். உழைக்காமல், வாழாமல், பொருள் தேடாமல், தன்னைப்போன்ற ஒரு மனிதனிடம் சென்று கையைநீட்டி "ஐயா ஒருகாசு கொடு" என்று கேட்பது இருக்கிறதே! அதுதான் இழிவு என்றான். இவனும் மனிதன்; அவனும் மனிதன். அவன் உழைப்பான், சேமிப்பான் தானும் உண்பான், மீத்தும் வைத்திருப்பான், நமக்குக்கூட அளிப்பதற்கு வைத்திருப்பான் என்று எண்ணிக்கைநீட்டுகிறானே, அப்போதும்கூட இவன் அவனைப்போல உழைக்காமல் முயற்சியை இழந்து விட்டுப் பிச்சை கேட்டுவாழுகிறானே, அதுதான் இழிவு! என்றான், இதைவிட இழிவு இல்லையா? என்றான் ஒருவன். இல்லை இல்லை என்றான். நன்றாய் எண்ணிப்பார் என்றான். எண்ணிப்பார்த்து இன்னும் ஒன்று இருக்கிறது என்றான். அது என்ன? என்று கேட்டான். இப்படி மானங்கெட்டுப் பல்லைக்காட்டி கையைநீட்டி "ஐயா காசு" என்று கூறுகிறவனிடம் போய் 'இல்லை' என்கிறானே, அதுதான் அதைவிட இழிவு.

புறநானூற்றிலே ஒரு பாடல் இது.

"ஈஎன இரத்தல் இழிந்தென்று அதனெதிர்
ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்றே"

கன்னத்திலே அறைந்தது போலக் கூறியிருக்கின்றார். இந்த நடை என்ன? உங்களுக்கு இரும்புக்கடலைநடையாயிருக்கிறதா? அந்தப்பாட்டினுடைய அடி இது. "ஈஎன இரத்தல் இழிந்தன்று ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்றே" இது அந்தப் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியருடைய கருத்து.

வள்ளுவர் கருத்து அதற்குமேலே சென்றுவிட்டது. இவர் என்ன சொன்னார் தெரியுமா? தனக்கு என்று இதைச் சொல்லவில்லை. பாதையிலே ஒருவன் போகிறான். பசுமாடு ஒன்று சாகப்போகிறது. நாக்கை இழுத்துக் கொண்டு தண்ணீர் வரட்சியினாலே சாகக்கிடக்கிறது, இவன் சென்று வேடிக்கை பார்க்கிறான் ஒருவன். பெரியவர் போய் "அட பாவிப் பயலே"! வேடிக்கை பார்க்கிறாயே! கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து பசுமாட்டுக்கு ஊற்றடா" என்றார். இவன் போய் "அம்மா" என்று ஒரு வீட்டின் கதவை தட்டி, "பசுமாடு சாகப்போகிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்கிறான். அங்கே போய்க் கன்னத்தில் அறைகிறார் வள்ளுவர்.



"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்"

என்று அறைகிறார். உனக்கு என்றில்லை. சாகப்போகிற பசுமாட்டுக்கும் கூட தண்ணீர் வேண்டுமென்று பிறர்கதவை தட்டிப் பிச்சைகேட்காதே! அதைவிட நாவிற்குவேறே என்ன இழிவு இருக்கிறது? என்கிறார், அந்தநிலையிலுங்கூட, எழு வாளியை எடு! கயிற்றை எடு! கிணறு எங்கே இருக்கிறது? தொட்டி எங்கே இருக்கிறது? குழாய் எங்கேயிருக்கிறது? போ! எடுத்துக்கொண்டுவந்துஊற்று! பிச்சையெடுத்து அறம் செய்யாதே! முயற்சி செய் என்று கூறுகிறார்.

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இழிவு" வள்ளுவர் ஒன்று சொல்வார். சொல்லாதது ஒன்பது சுற்றிக்கட்டித் தொங்கும், இரப்பது நாவிற்கு இழிவு என்றால் அப்புறம் என்னென்ன தொங்கிநிற்கிறது? இரக்க எண்ணுவது மனதிற்கு இழிவு! கேட்பது வாய்க்கு இழிவு! நீட்டிப்பெறுவது கைக்கு இழிவு! பெற்று உண்பது வாய்க்கு இழிவு! எல்லாம் தொங்கும் அதில். ஒன்றைச் சொல்லாமல் சொன்னவர் திருவள்ளுவர். இது எவ்வளவு பெரிய சிறந்த பண்பு, எண்ணிப்பாருங்கள்.

## ஆத்மஜோதி அச்சக நன்கொடைகள்

| | |
|---|---|
| சென்ற மாதக்கணக்கு | 1927-50 |
| திரு. P. நடேசபிள்ளை — கம்பளை | 5-00 |
| செல்வி. மதார்நாச்சியா — வியாங்கொடை | 7-00 |
| திரு. கா. மு. பரமசிவம் — வல்வெட்டித்துறை | 1-00 |
| மொத்தம் | 1940-50 |

# வாழ்க்கையின் இலட்சியம்

( செல்வி. C. மதார் நாச்சியா )

வாழ்க்கையில் நாம் யாபேர்களும் பிரச்சினைகளால் சூழப்பட்டு இருக்கிறோம். இவ்விதமான பிரச்சினைகளை மனதினால் ஆராய முடியுமா என்பது ஆலோசனைக்குரிய விஷயம். ஏனெனில் பிரச்சினையை அணுகும் மனம் விருப்பினாலோ அல்லது வெறுப்பினாலோ பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும் பிரச்சினைகள் வாழ்க்கையில் குறுக்கிடுவதற்குக் காரணம் மனமே. வெவ்வேறு விதமானதுயர உணர்ச்சிகளும் சலனங்களும் இல்லாது போய் விட்டால் மனம் என்பதே மறைந்து விடும்.

எண்ண எழுச்சிகளின் பல ரூபங்களின் கதம்பமே மனம் ஆகவேதான் மனது பிரச்சினைகளைச் சதா சிந்தித்து சிந்தித்து சித்தம் கலங்கி தெளிவற்ற நிலையில் அநேக பிரச்சினைகளை கற்பனையின் மூலமாக வடிவங் கொடுக்கிறது. பிரச்சினைகளின் வெப்பத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் முதலில் நாம் மனதின் பிடியிலிருந்து எவ்வாறு அகல்வது என்ற மர்மத்தை அறிய வேண்டும்.

மனிதன் எண்ணத்தின் சூட்சுமத்தை முற்றிலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவரை ஆசையின் நெருப்பிலே வெந்து மடிய வேண்டியதுதான். ஏனெனில் எண்ணத்தில் நினைப்பில் உனர்ச்சியைத் தூண்டிவிடும் ஆசையும் சேர்ந்தே இயங்குகிறது. அனுபவம் முற்றிலும் பூர்த்தியாகாத நிலையிலே தான் ஆசைகள் வேரூன்றுகிறது பல்தரப்பட்ட எண்



ண எழுச்சிகளின் புரட்சியே அமைதியை அறிவை ஆட்டி அசைத்து விடுகிறது. மனம் வெவ்வேறு ஆசைகளின் முடிச்சு ஆகவேதான் எண்ணத்தை நினைப்பின் ஆதாரத்தால் அறிய முடியாமல் இருக்கிறது. எது எண்ணத்தை அறியலாமென ஆராய்ச்சி செய்கிறதோ அந்த நினைவின் தொகுதியே கிளர்ச்சி தந்திடும், கீழ்த்தர உணர்ச்சியினால் கவரப்படக் கூடும் அல்லது ஆராயப் புகுந்தவன் எந்த உணர்ச்சியை ஆராய்கிறானோ அதுவாகவே மாறிவிடுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. நமது மனம் எப்பொழுதும் ஒரு ஆசை உணர்ச்சியைக் கவ்விக் கொண்டே இருக்கிறது. இவ்விதமாக மட்டரக எண்ணங்களில் சுழலும் மனம் துக்கவடிவமாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

மனிதன் கற்பனைக் கோட்டில் வாழும்வரையில் ஒழுங்காக வாழமுடியாது. உலகம் நம்மை மீறி எந்த விதஉணர்ச்சிகளையும் திணித்து விட முடியாது. நமது மனம் அந்த உணர்ச்சிகளின் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்படுவதினால் தான் வாழ்வு துக்கமாகவும் சோகமாகவும் காட்சியளிக்கிறது. தினசரி வாழ்வில் நிகழும் பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டுமானால் மனதை முற்றிலும் அறிந்து மனசற்ற மௌன நிலையில் இருக்கவேண்டும்.

உண்மையிலேயே மனதிற்கு அப்பாலே உள்ளங்கடந்த நிலை உண்டு. அங்கு இன்பத்திற்கும், துன்பத்திற்கும் சந்தர்ப்பம் இல்லை. காலத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது மனிதனின் அறிவுக் கண்கொண்டு அலசுவதற்கு எட்டாதது. அந்தத்தெய்வீக நிலையை அனுபவிக்க முடியாதவன் வாழ்க்கையில் இன்பத்தை நுகராதவன், விடுதலையை விளங்காதவன், சோகமென்னும் வறட்சியினால் வாடி வதங்குகிறவன் கல்வி கற்றும் கற்பனையின் வட்டத்தில் கட்டுப்பட்டவன், காலத்தினால்சாவென்ற பிறப்பென்ற விலங்கு பூட்டப்பட்டவன்.

எங்கு மனம் ஓய்கிறதோ எங்கு ஹிருதயம் பரிசுத்தமாக இருக்கிறதோ, எங்கு இதயம் சாந்தியினால் மௌனமுறுகிறதோ அங்குதான் அகண்ட சக்தியின் அற்புத அழகை

ரசிக்க முடியும். வாழ்வெனும் சோலை வனப்புடன் வளர வேண்டுமானால் மனம் பூமியிலே வட்டமிடாது ஆகாயத்தில் கிடைக்கும் அபூர்வ நீரினால் பசுமை பெறவேண்டும் அதாவது இருளைவிட்டு மனமற்றதோர் வெட்ட வெளியில் ஜெக ஜோதியைக் காணவேண்டும். அந்த அறிவே வாழ்க்கைக்கு ஆதாரம். அந்த அறிவு பெறுவதே வாழ்க்கையின் இலட்சியம்.

## எல்லாம் - பதினெட்டே

மக்கள் உய்ய வேத வியாசமுனிவர் இயற்றிய மகாபாரதம் என்ற பொக்கிஷம் பதினெட்டு பருவங்களைக் கொண்டது. குருக்ஷேத்ர யுத்தம் (வாழ்க்கைப் போராட்டம் என்னும் யுத்தம்) நடைபெற்றதும் பதினெட்டு நாட்களே. இரண்டு பக்கங்களிலும் சேர்ந்து போர்முனையில் வந்த படைகளும் பதினெட்டு அஹோறாகணியே. மேலும் கீதா சாஸ்திரமும் பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. இப்படி பார்க்கப்போனால் எல்லாம் பதினெட்டாக முடிவதைக் காணலாம். வாழ்க்கையில் நாம் படிப்படியாக ஏறி கடந்து செல்ல வேண்டிய படிகளும் பதினெட்டுதானே? ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து, விஷயங்களாகிய தன் மந்திரங்கள் ஐந்து, அகங்காரம், மகத் தத்துவம். அவ்யக்தம் என்ற மூன்று. இத்தகைய பதினெட்டுப் படிகளும் தாண்டினால் தான் அவனுடன் கூடி வாழமுடியும். நம் வாழ்க்கையும் பதினெட்டு அத்தியாயங்கள் கொண்டதுதான், துக்கயோகத்தில் ஆரம்பித்து மோட்ச சந்நியாச யோகத்தில் முடிவது தான் மனித ,வாழ்க்கை. இந்த பதினெட்டு படிகளில் உள்ள வாசல்களைத் தாண்டி செல்ல அந்த யோகேசுவரனின் கிருபை வேண்டும். அவன் வந்துதான் இந்த வாசல்களையெல்லாம் திறக்க வேண்டும். அதற்கு திரிகரண சுத்தியுடன் அவனை அழைக்க வேண்டும். அப்படி அழைத்தால் அவன் உடனே ஓடோடியும் வருவான்.

(சுவாமி ஜீ அபேதானந்தா)



உ

## வீடே உமக்கில்லையோ

(சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி)

இராகம்:- சாமா ஆரோகணம்:- ஸ ரி ம ப த ஸா
தாளம்:- ஆதி அவரோகணம்:- ஸ் த ப ம க ரி ஸா
28வதுமேளகர்த்தாவிற் பிறந்தது

### பல்லவி

வீடே உமக்கில்லையோ வீணிலேனலைந்தீர்
விரும்பிவந்தோர்க்கு நல்ல வீடளிக்கும் பரனே

### அநுபல்லவி

காடே கதியென்று களித்தங்கே ஆடினீர்
ஓட்டினை ஏந்தியே ஊரினிலே அலைந்தீர் (வீடே)

### சரணங்கள்

1 ஆடையின்றி ஒருகால் அகிலத்தினிலே திரிந்தீர்
ஆடைகிடைக்காமலோ அரும்புலித்தோலணிந்தீர்
ஓட்டையும் பாம்பையும் ஒளி அணியாய் அணிந்தீர்
கேட்பவர் இல்லையென்று கேவலமாய்ப் போகலாமோ

2 தேடினார்க் கடிமுடி தெரியாது நின்றீர்
தேவிக்குப் பாதியைக் கொடுத்தே மகிழ்ந்தீர்
ஆடியாடியே எம்மை ஆட்டுவிக்கின்றீர்
அன்பர்கட் இரங்கியே ஏவல் செய்கின்றீர் (வீடே)

3 தந்தை தாய் இல்லாது தான் தோன்றியாய் முளைத்தீர்
தலையிலுமொரு பெண்ணை மறைத்துவைத்திருக்கிறீர்
மைந்தனுமோ குறமங்கையை மணக்கவிட்டீர்
மோடி செய்யாது காட்சி தாருமையா அரனே (வீடே)

# நான் யார்?

( சங்கீத பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி )

அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்து எல்லா உயிர்களையும் ஆட்டுவிக்கப் படும் பொருளின் தன்மையை, எம் போன்றவர்க்ளால் எடுத்துரைக்க இயலாது. கடலாழம் பார்க்கச் சென்று கடலினுள் இறங்கிய உப்புப் பொம்மை மீண்டுவராது கடலோடு கலத்தல் போல, அருட்கடலாகிய இறைவனோடு கலந்தவர்களும், மீண்டுவந்து அவர்தன்மையை உரைக்கமாட்டார்கள் எனக்கூறியுள்ளார் இராமகிருஷ்ண பரமஹம்சதேவர். தேன் இனிமையுள்ளது எனக்கூறலாம், தேனினிமையெப்படியென்று யாராவது கேட்டால், சொல்லில் விளங்கவைக்க இயலாது. தேனை உண்டவரே அதிலுள்ள இனிமையை அறிவார்.

சிறியேன் பஞ்சப்புலன்களை வென்றவனல்ல மோகாந்தகாரத்தில் உழலுபவன். என்னுடைய வாழ்க்கையிற் கண்டசில அதிசயங்களை இங்கே தருகிறேன். இவை நான் இசைக்கலையைக் கற்கமுன் நடந்தவை.

எனது பதினுருவது வயதிற் பள்ளிக்கூடப்படிப்பை நிறுத்த நேர்ந்தது. கற்க ஆவலிருந்தும் தந்தையாரின் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு உதவி தேவைபட்டதால் துக்கத்தோடு படிப்பை நிறுத்தினேன். அக்காலத்தில் ஆடுகளை வளர்த்தல் எனக்குப் பிரியமாகவிருந்ததால் ஆடுகளும் வளர்த்துவந்தேன். ஆடுகளுக்குக் குளை அறுப்பதற்காகத் தினமும் ஒரு காட்டுக்குச் சென்றேன்.

வழக்கம் போல் ஒருநாள் அக்காட்டினுட் சென்றேன் நேரம் காலை ஒன்பது மணி இருக்கும் விரைவாகப் பற்றைகளில் படர்ந்த கொடிக் குளைகளை அறுத்தேன்



திடீரென்று, நான் யார்? என்ற கேள்வி என்னுள்ளத்தினுள் எழுந்தது. நான், அக்காலத்தில் நாவல்களைத் தவிர ஆத்மா சம்பந்தமான எந்தநூலையும் படித்திருந்தவனுமல்ல ஏன் இப்படி எண்ணினேன் என்பது எனக்கே தெரியாது.

இந்த எண்ணம் மிக்கவலுவடைந்தது. தடைசெய்யமுடியவில்லை. நான், நான் என்று உள்ளே, ஆழ்ந்து சென்றேன். உடனே எனது உடலிலிருந்து வேருய் நின்றேன். எனக்குப் பெயர் ஒன்றுமில்லை எனக்கண்டேன். இவ்வுலகத்தோர்க்கும் எனக்கும் ஒரு தொடர்பும் இல்லையென உணர்ந்தேன்.

கடவுளே நீ எங்கே இருக்கிருய். நான் இங்கே எப்படியிருப்பேன். இதென்ன மாயம்! இந்த உடற் சிறைக்குள் நான் கட்டுப்பட்டு நில்லேன்! நில்லேன்! என எண்ணினேன்.

அச்சமயம் யான் சுதந்திரமாக எங்குப் போகத்தக்க ஒரு அதிசய நிலையடைந்தேன். சிறிது நேரத்திற்குள் தேகத்திலிருந்து வேறுபடாத நிலைவந்தது. இருதயம் மாத்திரம் ஓடிக்களைப்படைந்தவர்களைப் போல் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. பயமாகவும் இருந்தது.

அறுத்த குளைகளை எடுத்துக்கட்டித் தலையில் வைத்துக் கொண்டு வீடு நோக்கி வந்தேன். வரும்போது மறுபடியும் உடல்வேறுபட்டுத்தோற்றுதிருப்பதற்காகத்தாய்தந்தைசகோதரர் ஆகியோரை நினைத்துக்கொண்டு வந்தேன். ஒரு அரை மைல் வரையில் வந்ததும் எனது ஏமாற்றுக்குக் கட்டுப்படாமல் பழையபடி உடலும் நானும் பிரிந்து நிற்கும்நிலை வந்துவிட்டது. அப்போது மேலும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

திடீரென்று நான் நிலத்திலிருந்து மேலே பதின்நான்கு பதினைந்து அடிமதிக்கத்தக்க உயரத்தில் நின்றேன். எனது உடல் குளையைச் சுமந்தபடி நிலத்தில் நிற்பது தெரிந்தது. நான் எவ்வடிவத்தில் மேலே நின்றேன் என்பது எனக்கே

தெரியவில்லை. இரண்டு மூன்று நொடிப்பொழுதிற்குள் உடலோடு ஒட்டிய நிலையையடைந்தேன். அப்போதும் இருதயம் மிகவேகமாக அடித்துக்கொண்டிருந்தது. ஒருவரிடமும் இதை அன்று கூறவில்லை. சில நாட்கள் சென்றபின் என்னுடன் சிநேகமாயிருந்த சிலரிடம் உங்களுக்கு எப்போதாவது உடல் வேருகத் தெரிகிறதா என்று கேட்டேன். என் கேள்வியே அவர்கட்கு அதிசயமாகவிருந்தது. அதிலிருந்து சாதரணமாக எல்லோருக்கும் இப்படித் தோன்றுவதில்லையென அறிந்தேன். வேறுபட்ட நிலை தோன்றும் போது மாற்று மருந்தாக உறவினர்களை எண்ணுவது வழக்கமானது.

இந்நிலையில் இரண்டு மூன்று வருடங்கட்கு முன் ''சீவப்ரம்மைக்கியவேதாந்தரகசியம்'' என்றஓர் நூலைநண்பர்தந்தார் அதைப்படித்த பின் தான் உடல் வேறுபட்டுத்தெரியும் நிலையின் ரகசியம் புலப்பட்டது.

ஒரே கிளியைத் தங்கக் கூட்டிலும் அடைக்கலாம். தகரக்கூட்டிலும் அடைக்கலாம். கூடுகளின் தன்மை தான் வித்தியாசம். உடல் வேறுபட்டுத் தோன்றும் நிலையில் நாம் ஆணுமல்லப் பெண்ணுமல்ல, எச்சாதி சமயங்கட்கும் கட்டுபட்டவர்களல்ல என்பதை அனுபவத்தில் உணர்வோம். வாதத்தை விடுவோம். கல்வி அறிவுக்கு எட்டாத புதுமைகளைக் காண்போம். வான ஆராய்ச்சியைக் கண்டு வியக்கும் இக்காலத்தில் ஞானத்தின் எல்லையில்லாத சக்தியை அறிவோம்.

" காட்டுவித்தாலாரொருவர் காணுதாரே ''

இன்று உன்னுல் கூடியமட்டும் நன்ருகச் செய். நாளை அதனினும் நன்ருகச் செய்யும் ஆற்றல் நீ பெறக்கூடும்.

– நியூட்டன்.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம் வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

ஏப்ரில்மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | |
|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 19078975 |
| பருத்திதுறை | 20605 |
| நாவலப்பிட்டி | 123410 |
| அல்லித்தோட்டம் | 50608 |
| இயக்கச்சி | 18000 |
| உசன் | 19402 |
| மிருசுவில் | 6384 |
| இராமநாதபுரம் — கிளிநொச்சி | 5025 |
| கொக்குவில் | 4712 |
| பண்டாரவளை | 1200 |
| மாத்தளை | 10160 |
| திரிகோணமலை | 13280 |
| மூதூர் | 44020 |
| பதுளை | 13200 |
| கட்டுவன் | 13600 |
| லேன்ஸ்டவன் — இரத்தினபுரி | 57432 |
| உடுப்பிட்டி | 10000 |
| கல்லெல்ல | 6720 |
| நல்லூர் | 19530 |
| திமிலைத்தீயு | 8000 |
| மாணிக்கவல்லி ரத்தோட்டை | 20000 |
| மத்துகமப்பட்டினம் | 6000 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | 16000 |
| மதுகெதறத்தோட்டம் | 20400 |
| சீக்கிஞக்கந்த ,, | 3000 |
| மத்துகமத் ,, | 4160 |
| இலப்பந்துறப் பட்டினம் | 2000 |
| பாந்திய தோட்டம் | 2000 |
| கல்வயல் | 1475 |
| டம்பாரைத்தோட்டம் | 6732 |
| நாகெனித் தோட்டம் | 3000 |
| மொத்தம் | 19609030 |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


## சர்க்கரை கொல்லி சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனைகள் போதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புதஔடதம் யாவும் மூலிகையினுல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச.

இலங்கையில் கிடைக்குமிடம்:

**ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2(S. I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ


## சந்தா நேயர்களுக்கு

ஜோதி எடுக்கும் சந்தா நேயர்கள் அனைவரும் தமது சந்தாப் பணங்களை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவருது குறிப்பிட வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம்-2

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தருக.

**ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

(சிலோன்)

Printed & Published by Mr. N. Muthiah Athmajothi Nilayam Nawalapitiya.
at ATHMAJOTHI PRESS NAWALAPITIYA. (Ceylon). 14-5-61.